**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2636/ஆ5/2025, நாள்.13/08/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 – அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான (அரசு பள்ளி) மாணவர்களிடம் கூட்டுறவு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – வட்டார அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவில் 19.08.2025 அன்று போட்டிகள் நடைபெறுதல் – போட்டியில் கலந்துகொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.000886/எம்2/இ3/2025 நாள். 04.06.2025
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 16.06.2025
3. வேலூர் மாவட்ட அலுவலரின் (இடைநிலை) கடித ந.க.எண்.1953/ஆ5/2025, நாள். 25.07.2025

•••••

பார்வை 1ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025, அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான (அரசு பள்ளி) மாணவர்களுக்கு கூட்டுறவு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக பள்ளி அளவில் மற்றும் வட்டார அளவில் கூட்டுறவு தொடர்பான கதை சொல்லுதல் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டி நடத்த தெரிவிக்கப்பட்டு, பள்ளி அளவில், வட்டார அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் பார்வை 3–ல் காணும் கடிதம் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

வட்டார அளவில் வட்டாரம் வாரியாக முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கீழ்காணும் படி நடைபெறும் மாவட்ட அளவிலான கூட்டுறவு தொடர்பான கதை சொல்லுதல் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டிகளில் தவறாமல் பங்குபெறுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. (வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

| மாவட்ட அளவிலான கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வு போட்டி | |
|---|---|
| **போட்டி நடைபெறும் இடம்** | ஊரிஸ் நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர் |
| **நாள் மற்றும் நேரம்** | 19.08.2025 அன்று (செவ்வாய் கிழமை) காலை 9.30 மணி முதல் |

| வ. எண் | நிகழ்ச்சி | தலைப்பு |
|---|---|---|
| 1 | கூட்டுறவு தொடர்பான கதை சொல்லுதல் போட்டி | நான் பார்த்த கூட்டுறவு சங்கத்தின் கதை |
| 2 | பேச்சுப் போட்டி | சமூக பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவின் பங்களிப்பு |
| 3 | கட்டுரை போட்டி | அனைவருக்கும் கூட்டுறவு அனைத்தும் கூட்டுறவு |

மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் 2025 அக்டோபர் மாதத்தில் நடைபெறும் மாநில அளவில் கலந்துக்கொள்ள வேண்டும். வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு கூட்டுறவு வாரா விழாவின் போது (நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை ) பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>பரிசு விவரம்</u>

| நிலை | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| வட்டார அளவில் | ரூ.5000/- | ரூ.3000/- | ரூ.2000/- |
| மாவட்ட அளவில் | ரூ.10000/- | ரூ.6000/- | ரூ.4000/- |
| மாநில அளவில் | ரூ.20000/- | ரூ.12000/- | ரூ.8000/- |

வட்டார அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் தவறாமல் பங்குபெறுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –
வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

முதன்மைக்கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த அரசு பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
   (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்,
   வேலூர் மண்டலம், வேலூர் – 9.
4. பள்ளித் துணை ஆய்வாளர்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம்) வேலூர் மாவட்டம்.
   (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சார்ந்த அலுவலர் மூலமாக)
5. தலைமையாசிரியர்,
   ஊரிஸ் நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது)